விடுகிறது எனவும் கண்டறியப்பட்டுள்ளது. எனவே, உற்பத்தி யளவு விதைக்கும் பருவ காலத்திற்கு ஏற்ப மாறுபடுகிறது. நிகர லாபம் எந்தப் பருவ காலத்தில் பயிரிடப்படுகிறது என்பதைப் பொறுத்தும், சாகுபடி முறைகளைக் கையாள்வதைப் பொறுத்தும் ஹெக்டேர் ஒன்றுக்கு ரூ. 62.50 முதல் ரூ. 625/—வரை கிடைக்கிறது. வணிக ரீதியில் பயிரிடுவது, செடிகளைப் பதப்படுத்தி நார் உரிப்பதற்குத் தேவையான நீர்வசதிகளை பொறுத்து இருக்கிறது. இந்தப் பயிர்கள் கோடை காலத்தில் அறுவடைக்கு வருவதால் அத்தகைய நீர் வசதிகள் நமது மாநிலத்தில் தேவையான அளவு இல்லை. எனவே வணிக ரீதியில் இப்பயிர்களைப பயிரிடுவதற்கான சாத்தியக் கூறுகள் மிகக் குறைந்த அளவே தற்போது உள்ளது.

இணைப்பு II.

[—21ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண் 190-க்கான விடையைக் காண்க].

விவர அறிக்கை.

1981–82 ஆம் ஆண்டில் நெல் உற்பத்தியைப் பெருக்குவதற்காகக் கையாளப்படும் வழிமுறைகள் பின்வருமாறு:—

1. இரக மாற்றம்.

(அ) 20.60 லட்சம் ஹெக்டேர்களில் ஐ.ஆர். வகை இரகங்களைப் பயிரிடுதல், மேலும் 2.60 லட்சம் ஹெக்டேர்களில் உயர் விளைச்சல் இரகங்களைப் பயிரிடுதல்.

(ஆ) சம்பா பட்டத்தில் உயர் விளைச்சல் இரகங்களின் உபயோகத்தைப் பிரபலப்படுத்துதலும், எல்லா மாவட்டங்களிலும் பயிரிடும் பரப்பை அதிகரிக்கத் தீவிர முயற்சி மேற்கொள்ளுதலும்.

(இ) ஏடிடீ, 23, ஏடிடீ, 34: ஏடிடீ, 35, ஐ ஆர். 34, என். எல். ஆர். 9672, ஏ.எஸ்.டி. 15 மற்றும் ஏடிடீ. 36 ஆகிய புதிதாக வெளியிடப்பட்டுள்ள உயர் விளைச்சல் இரகங்களை அறிமுகப்படுத்துதல்.

(ஈ) 9,500 டன்கள் சான்றிதழ் பெற்ற விதைகளை விநியோகித்தல்.

2. உர உபயோகம்.

ஒரு ஹெக்டேருக்கு உர உபயோகத்தை 85 கிலோ தழைச் சத்தாகவும், 36 கிலோ மணிச்சத்தாகவும், 36 கிலோ சாம்பல் சத்தாகவும் அதிகரித்தல்.

நிர்வாக நடைமுறைகள்:

1. விதை நேர்த்தி செய்தல்.

2. "பாய் நாற்றங்கால்" முறையைக் கடைப்பிடித்தல்.

3. நீலப் பச்சைப் பாசியை உபயோகித்து உரமிடுதல்.

4. துத்தநாக உப்பை உபயோகித்தல்.

5. உரிய இடத்தில் உரமிடுதல்.

6. உரிய இடத்தில் "பூச்சிக் கொல்லி மருந்துக் குருணைகளை" இடுதல்.

7. உரமிடவும், பூச்சிக்கொல்லி மருந்துகளை இடவும் "உரமிடும் கருவியை" (Gravitor Applicator) உபயோகிப்பதைப் பிரபலப்படுத்துதல்.

3. பயிர்ப் பாதுகாப்பு:

1. விதை நேர்த்தி செய்தல்.

2. நாற்றுக்களின் வேர் பாகங்களைப் பூச்சிக்கொல்லி மருந்து திரவத்தில் தோய்த்து எடுத்தல்.

3. "புகையான்" அதிகமாகத் தாக்கியுள்ள இடங்களில் அதிகக் கவனம் செலுத்தி "புகையானை"க் கட்டுப்படுத்துதல்.

4. எலி ஒழிப்பு செய்தல்.

4. பெருமளவில் விவசாயிகளிடம் தொடர்பு கொள்ளுதல்.

பயிற்சி மற்றும் பார்வை முறையை (Training and Visit System.) ஏழு மாவட்டங்களில் அறிமுகப்படுத்துதல், மற்றும் ஒரு ஏக்கர் "ஒருங்கிணைப்பு விளக்கப் பண்ணைகளை (One acre composite demonstration) ஏற்படுத்துதல்" பயிற்சி மற்றும் பார்வை முறை அறிமுகப்படுத்தப்படாத இடங்களில் பெரு விளக்கப் பண்ணைகளை ஏற்படுத்துதல்.

5. பயிற்சி:

எல்லா விரிவாக்கப் பணியாளர்களுக்கும், ''காரீப்'' மற்றும் ''ராபி'' பட்டங்கள் ஆரம்பமாகுமுன், ''முன்பருவ பயிற்சி'' அளித்தல் உழவர் பயிற்சி மையங்களின் மூலம் விவசாயிகளுக்குப் பயிற்சி அளித்தல்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS